ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

33	T	I

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2021(2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2021(2022)
General Certificate of Education (Ord. Level) Examination, 2021(2022)

ඉතිහාසය I
வரலாறு I
History I

පැය එකයි
ஒரு மணித்தியாலம்
One hour

அறிவுறுத்தல்கள் :

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. இவ்வினாத்தாளுக்கு **80** புள்ளிகள் வழங்கப்படும்.
- **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
- **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**
- அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

1. இலங்கையின் வரலாறு பற்றிய தகவல்களைப் பெறக்கூடிய புராதன இலக்கிய மூலாதாரம்
(1) மகாவம்சம் (2) தீபவம்சம் (3) தாதுவம்சம் (4) தூபவம்சம்

2. கற்பாறைகளிலே எழுதப்பட்ட சாசனம் எப்பெயரால் குறிப்பிடப்படுகின்றது?
(1) பாறைக் கல்வெட்டு (2) குகைக் கல்வெட்டு
(3) தூண் கல்வெட்டு (4) சுவர்க் கல்வெட்டு

3. புராதன பிராமி கல்வெட்டில் 'புகமத்த' என்ற பெயரால் குறிப்பிடப்பட்ட அதிகாரி நகரத்தின்
(1) நிர்வாகத்துக்குப் பொறுப்பாக இருந்த நபராவார்.
(2) பிரதான பாதுகாப்பு அதிகாரியாவார்.
(3) வர்த்தக நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான அதிகாரியாவார்.
(4) பிரதான கட்டிடக் கலைஞராவார்.

4. வரலாற்றுக்கு முந்திய மனிதன் வசித்ததாகக் கருதப்படும் இடங்களில் மிகவும் பழமையான இடங்கள்
(1) கித்துள்கல பெலிலேன, பெல்லன்பதிபெலஸ்ஸ
(2) பாஹியன்கல, குருவிற்ற பட்டதொம்பலன்ன
(3) அத்தனகொட அலுலென, மானியம்கம
(4) சீகிரிய பொத்தான, சீகிரிய அலிகல

5. அரசுரிமை தந்தைக்குப் பின்னர் மகனுக்கு உரித்தான சந்தர்ப்பம்
(1) தேவநம்பியதீச மன்னனின் பின்னர் உத்திய அரசனாகுதல்
(2) காவந்திஸ்ஸ மன்னனுக்குப் பின்னர் துட்டகைமுனு அரசனாகுதல்
(3) முதலாம் விஜயபாகு மன்னனுக்குப் பின்னர் முதலாம் பராக்கிரமபாகு அரசனாகுதல்
(4) முதலாம் விமலதர்ம சூரிய மன்னனின் பின்னர் செனரத் அரசனாகுதல்

6. நிஸ்ஸங்கமல்ல மன்னனால் பயன்படுத்தப்பட்ட அரசு பற்றிய கோட்பாடு எது?
(1) ஆண்டவன் (2) சக்கரவர்த்தி (3) போதிசத்துவர் (4) மலையின் அரசன்

7. கற்குகைகளை வசிப்பிடமாக அமைக்கும்போது பாறைமேல் விழும் மழைநீர் குகையினுள் வழிவதைத் தடுப்பதற்குப் பின்பற்றப்பட்ட செயற்பாடு எது?
(1) கற்குகையின் உட்பகுதியைத் தோண்டுதல்
(2) குகையைச் சுற்றி மண்ணால் சுவர் கட்டுதல்
(3) குகையினுள் பீலிகளை அமைத்தல்
(4) கற்களால் குகையை மூடிவிடுதல்

[பக். 2 ஐப் பார்க்க

8. புனித தந்ததாதுவுடன் ஹேமமாலி இளவரசியும் தந்த இளவரசனும் கரையேறிய கப்பல் தரிப்பிடம் எது?
   (1) மாதோட்டம் (2) கோகண்ணதித்த
   (3) தம்பகொலபட்டின (4) லங்காப்பட்டினம்

9. அலைதாங்கியினால் நிறைவேற்றப்படும் பணி
   (1) குளக்கட்டு அரிப்புறுவதைத் தடுப்பதாகும்.
   (2) மடைக்கதவில் ஏற்படும் அமுக்கத்தைக் கட்டுப்படுத்துவதாகும்.
   (3) குளத்தின் மேலதிக நீரை வெளியேற்றுவதாகும்.
   (4) குளத்தில் சேரும் சேறு கால்வாய்களுக்குச் செல்வதைத் தவிர்ப்பதாகும்.

10. அம்பன் கங்கையை மறித்துக் கட்டப்பட்ட கால்வாய்
   (1) யோதஎல கால்வாய் (2) மினிப்பே கால்வாய்
   (3) அங்கமிடில்ல கால்வாய் (4) எலஹர கால்வாய்

11. பின்வரும் A - D வரையிலான ஆக்கங்களில் புராதன இலங்கையின் விஞ்ஞானம் தொழிநுட்பம் என்பவற்றைப் பயன்படுத்துவதில் முதிர்ச்சியடைந்த சந்தர்ப்பங்களுக்கான உதாரணங்களைக் கொண்ட விடை எது?
   A - களிமண் ஓடக கல்லறை
   B - சீகிரியாவின் நீர்ப்பூங்கா
   C - நிறந்தீட்டப்பட்ட மட்பாண்டங்கள்
   D - தட்டம் பொய்கை
   (1) A, C (2) B, C (3) B, D (4) C, D

12. இயற்கைச் சூழல் செயன்முறை பற்றிய அறிவினை தொழிநுட்பத்துக்காகப் பயன்படுத்திய சந்தர்ப்பம்
   (1) நுவன்வெலிசாயவின் அத்திவாரத்தைத் தயார்ப்படுத்தியமை
   (2) மல்வத்து ஓயாவுக்குக் குறுக்கே கல்லாலான பாலம் ஒன்றைக் கட்டியமை
   (3) பலாங்கொடை சமனலவெவ பிரதேசத்தில் இரும்பு உருக்கும் உலையினைத் தயாரித்தமை
   (4) தெமுகம கோட்டவிகாரைக் கைவிளக்கினை உருவாக்கியமை

13. பின்வருவனவற்றுள் 'தக்கபதி' என்ற பெயருடைய வரி எதற்காக வசூலிக்கப்பட்டது?
   (1) சேனைப் பயிர்செய்கைக்கு
   (2) குளத்து நீரைப் பயன்படுத்துவதற்கு
   (3) அரசனுக்குச் சொந்தமான நிலங்களில் பயிர்செய்வதற்கு
   (4) வாய்க்கால்களில் மீன் பிடிப்பதற்கு

14. பின்வருவனவற்றுள் புராதன இலங்கையில் உள்நாட்டு வர்த்தகம் பற்றிய சட்டங்கள் அடங்கிய கல்வெட்டு எது?
   (1) சொரபொரவெவக் கல்வெட்டு (2) மிகிந்தலை சுவர் கல்வெட்டு
   (3) வேவல் கெட்டிய கல்வெட்டு (4) கொடவாய கல்வெட்டு

15. உயர் நிலங்களில் உள்ள காடுகளை அழிக்கக்கூடாதென சட்டம் விதித்ததின் மூலம் புராதன மன்னர்கள் எதிர்பார்த்தது
   (1) இயற்கை நீர்நிலைகள் வற்றிப்போவதைத் தடுத்தலாகும்.
   (2) குளங்களில் மண்படிவதைத் தடுத்தலாகும்.
   (3) காட்டு விலங்குகளின் இருப்பிடங்களைப் பாதுகாத்தலாகும்.
   (4) பயிர்செய் நிலங்களில் மண் வளமற்றுப் போவதைத் தவிர்த்தலாகும்.

16. பின்வரும் எந்த அரசன் ஆட்சிக்காலத்தில் ஜோதிய செட்டியின் கலகம் ஏற்பட்டது?
   (1) முதலாம் விஜயபாகு (2) முதலாம் பராக்கிரமபாகு
   (3) ஆறாம் பராக்கிரமபாகு (4) ஆறாம் விஜயபாகு

[பக். 3 ஐப் பார்க்க

17. கண்டி இராச்சியத்தில் நிலம் அவற்றின் உரிமை அனுபவித்தல் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு பிரிக்கப்பட்ட பிரிவுகள் நிரல் I இலும் அந்தப் பிரிவுகள் பற்றிய விளக்கம் நிரல் II இலும் குறிப்பிடப்பட்டுள்ளன. நிரல் I இற்கு அமைய நிரல் II இனைப் பொருத்தும்போது வரும் சரியான விடை எது?

நிரல் I	நிரல் II
1. கபடாகம்	A - ரதல பிரதானிகளின் சேவைக்காக வழங்கப்பட்ட நிலம்
2. நிந்தகம்	B - விகாரைகளுக்கு தானம் அளிக்கப்பட்ட நிலம்
3. விகாரகம்	C - அரச மாளிகைக்காகப் பயன்படுத்தப்பட்ட நிலம்
	D - தேவாலயங்களுக்கு தானமளிக்கப்பட்ட நிலம்

(1) ACD (2) BDA (3) CAB (4) CBD

18. போர்த்துக்கேயர் இந்நாட்டுக்கு வருகை தந்தபோது யாழ்ப்பாணப் பிரதேசத்தின் ஆட்சியாளன்
(1) பரராஜசேகரம் (2) எதிர்மன்னசிங்கம் (3) சங்கிலி (4) புவிராஜபண்டாரம்

19. கி. பி. 1848 சுதந்திரப் போராட்டத்தின் பின்னர் நாட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு பிரித்தானிய அரசாங்கம் எடுத்த நடவடிக்கை
(1) கைதுசெய்யப்பட்ட தேசிய தலைவர்களை விடுதலை செய்தமை.
(2) கட்டாய சேவை இராஜகாரிய முறை நீக்கப்பட்டமை.
(3) விவசாய மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு குழு ஒன்றை நியமித்தமை.
(4) வரிகள் சிலவற்றை நீக்கியமை.

20. 1972 அரசியல் சீர்திருத்தத்தின்படி பிரதிநிதிகள் சபைக்கு வழங்கப்பட்ட பெயர் யாது?
(1) சட்டவாக்கக் கழகம் (2) அரசுக்கழகம்
(3) தேசிய அரசுப் பேரவை (4) செனற் சபை

21. பௌத்த சமய மறுமலர்ச்சிக்கு அநாகரிக தர்மபால வழங்கிய பங்களிப்பு
(1) பௌத்த புனித தலங்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்தமை
(2) பௌத்த கொடியை உருவாக்கியமை
(3) ஐம்பெரும் விவாதங்களுக்கு அனுசரணை வழங்கியமை
(4) வெசாக் பூரணை தினத்தை விடுமுறை தினமாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தமை

22. ஆறுமுக நாவலரினால் யாழ்ப்பாணத்தில் சைவ ஆங்கில வித்தியாசாலை ஆரம்பிக்கப்பட்டதன் பிரதான நோக்கம்
(1) இந்து கலாசாரத்தைத் தமிழ் மாணவர்களிடையே பரப்புதல்
(2) திறமையுள்ள தமிழ் மாணவர்களுக்கு இலவசக் கல்வியை வழங்குதல்
(3) தமிழ் மொழியில் கல்வி பெறுவதற்கு ஒரு பாடசாலையை நிறுவுதல்
(4) தமிழ் மாணவர்களிடையே ஆங்கிலக் கல்வியைப் பரப்புதல்

23. இஸ்லாம் சமய மறுமலர்ச்சிக்கு டி. பி. ஜாயா அவர்கள் செய்த சேவைகளில் ஒன்று
(1) முஸ்லிம் நேசன் செய்திப் பத்திரிகையை ஆரம்பித்தமை
(2) முஸ்லிம் மக்களுக்காகப் பாடசாலைகளைத் தாபித்தமை
(3) முஸ்லிம் பெண்கள் கல்லூரிகளை ஆரம்பித்தமை
(4) கொழும்பு முஸ்லிம் கல்விச் சபையைத் தாபித்தமை

24. சூரியமல் இயக்கம் தொடர்பான சரியான கூற்று எது?
(1) முதலாம் உலகப்போரில், அங்கவீனமுற்ற பிரித்தானிய படைவீரர்களுக்கு நிதி சேகரிப்பதற்கான இயக்கமாகும்
(2) இலங்கையில் சுதந்திரத்துக்காக மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டங்களுக்கான பிரச்சார இயக்கமாகும்
(3) போர் முடிவுற்ற தினத்தைக் கொண்டாடுவதற்காக சூரியகாந்தி மலரை விற்கும் இயக்கம் ஆரம்பமானது
(4) சூரியகாந்திப் பூவை விற்பனை செய்வதால் கிடைக்கும் பணத்தை பிரித்தானிய திறைசேரிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

[பக். 4 ஐப் பார்க்க

34. ஐக்கிய நாடுகள் சபையின் நிறுவகங்களுக்கு உரிய செயற்பாடுகள் சில கீழே தரப்பட்டுள்ளன. இவற்றில் பொதுச் சபைக்கு உரிய செயற்பாடுகளைக் குறிப்பிடுவது

A - ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச நம்பிக்கை பொறுப்பின் கீழ் கொண்டு வரப்பட்ட பிரதேசங்களை நிர்வகித்தல்

B - ஐக்கிய நாடுகள் சபைக்கு புதிய அங்கத்துவ நாடுகளைச் சேர்த்துக் கொள்ளுதல்

C - ஐக்கிய நாடுகள் சபையின் நிறுவகங்களுக்குத் தேவையான சட்ட ஆலோசனைகளை வழங்குதல்

D - பாதுகாப்புச் சபையின் சிபாரிசின்படி செயலாளர் நாயகத்தைத் தெரிவுசெய்தல்

(1) A, C (2) A, D (3) B, C (4) B, D

- பின்வரும் அட்டவணையில் A தொடக்கம் J வரையிலான தகவல்களைக் கொண்டு **35, 36** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

மன்னன்	இடம்	படைத் தளபதி
A. முதலாம் இராஜசிங்கன்	D. கன்னொறுவ	G. ஜெரனிமோ த அசவேது
B. முதலாம் விமலதர்மசூரியன்	E. முல்லேரியா	H. தியாகோத மெல்லோ
C. இரண்டாம் இராஜசிங்கன்	F. பலனை	J. கொன்ஸ்தாந்தைன் த சூசா

35. கன்னொறுவைப் போருடன் தொடர்புடைய கண்டி மன்னனையும் போர்த்துக்கேயப் படைத் தளபதியையும் குறிப்பிடும் விடை எது?

(1) A, H (2) B, J (3) C, G (4) C, H

36. முதலாம் விமலதர்மசூரிய மன்னன் போர்த்துக்கேயருடன் போரிட்ட இடமும் அப்போது போர்த்துக்கேய படையை நடாத்திச் சென்ற தளபதியையும் குறிப்பிடும் விடை எது?

(1) D, G (2) D, J (3) E, J (4) F, G

- பின்வரும் A, B என்ற கூற்றுக்களைக் கொண்டு **37** ஆம் வினாவுக்கு விடை தருக.

A - அடிப்படை மனித உரிமைகள் பற்றி உலகம் முழுவதும் ஆர்வம் ஏற்பட்டமை

B - உலகில் முதன்முதலில் எழுதப்பட்ட அரசியல் யாப்பு உருவாக்கப்பட்டமை

37. பிரான்சிய புரட்சி தொடர்பில்

(1) A, B உண்மையானவை (2) A, B பொய்யானவை

(3) A உண்மையானது B பொய்யானது (4) A பொய்யானது B உண்மையானது

- பின்வரும் A, B, C, D என்பனவற்றில் கூற்றுக்கள் / சொற்கள் சோடிகளாகத் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு கூற்று / சொற் சோடிகளில் முதலாவதுக்கும் இரண்டாவதுக்கும் இடையிலான தொடர்பினைப் பரிசீலித்து **38** தொடக்கம் **40** வரையான வினாக்களுக்கு விடை தருக.

A - 1. ஐந்து மாகாணங்களாக இலங்கை பிரிக்கப்படுதல்
 2. கோல்புறூக் கமரன் சீர்திருத்தம்

B - 1. மனிங் அரசியல் சீர்திருத்தம்
 2. சட்டவாக்கக் கழகம் அறிமுகம்

C - 1. ஆளுநர் பதவி
 2. 1972 அரசியல் யாப்பு

D - 1. 1978 அரசியல் யாப்பு
 2. விகிதாசாரப் பிரதிநிதித்துவம்

38. முதலாவதை இரண்டாவதின் விளைவாகக் குறிப்பிடும் சோடி எது?

(1) A (2) B (3) C (4) D

39. முதலாவதின் மூலம் இரண்டாவது அறிமுகமான சோடி எது?

(1) A (2) B (3) C (4) D

40. இரண்டாவது செயற்படுத்தப்பட்டதோடு முதலாவது நீக்கப்பட்டதைக் குறிப்பிடும் சோடி எது?

(1) A (2) B (3) C (4) D

* * *

25. டொனமூர் அரசியல் யாப்பின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட அம்சங்களில் ஒன்று
(1) பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம்
(2) பாராளுமன்ற அரசியல் முறை
(3) சர்வசன வாக்குரிமை
(4) மலைநாடும் தாழ்நிலப் பிரதேசமும் ஒன்றிணைக்கப்பட்ட நிர்வாகம்

26. பின்வரும் A - D வரையான விடயங்களில் பிரித்தானியர் ஆட்சி காரணமாக இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார மாற்றங்களை மாத்திரம் கொண்டுள்ள விடையினைத் தெரிவுசெய்க.
A - ஏற்றுமதிக்கான பெருந்தோட்டப் பயிர்களின் அறிமுகம்
B - விவசாய விருத்தி அரசாங்கத்தின் முக்கிய பொறுப்பாகியது
C - நில உரிமையற்ற விவசாய மக்கள் தோன்றுதல்
D - உழைப்பு அரச சேவை முறை அமுலாக்கப்படுதல்
(1) A, B (2) A, C (3) B, D (4) C, D

27. மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் நோக்கங்களில் ஒன்று
(1) வரண்ட வலயத்தில் புராதன குளங்களையும் நீர்ப்பாசனக் கால்வாய்களையும் புனரமைப்புச் செய்தல்
(2) விவசாய உற்பத்திப் பொருளை விற்பனை செய்வதற்கு வர்த்தக மத்திய நிலையங்களைத் தாபித்தல்
(3) அதிகரித்துச் செல்லும் மின்சாரத்தின் கேள்வியை ஈடுசெய்ய மின்சாரத்தை உற்பத்தி செய்தல்
(4) சிறு ஏற்றுமதிப் பயிர்களைப் பயிரிடுவதற்கு காணிகளை ஒதுக்குதல்

28. பின்வரும் A தொடக்கம் D வரையான தேர்தல்களில் முழு இலங்கையும் ஒரு தேர்தல் தொகுதியாகும் சந்தர்ப்பங்களைக் குறிப்பிடும் தெரிவு எது?
A - ஜனாதிபதித் தேர்தல் B - பொதுத் தேர்தல்
C - மாகாணசபைத் தேர்தல் D - பொதுசன அபிப்பிராய தேர்தல்
(1) A, B (2) A, D (3) B, C (4) C, D

29. மறுமலர்ச்சிக் காலத்தில் பல்வேறு கண்டுபிடிப்புக்களைச் செய்த தனிநபர்களில் ஆங்கிலேய இனத்தவரான வில்லியம் ஹார்வே எத்துறையில் புகழ்பெற்றிருந்தார்?
(1) சித்திரக்கலை (2) வைத்தியத் துறை
(3) இலக்கியம் (4) நாடுகாண் பயணங்கள்

30. மறுமலர்ச்சிக் காலத்தில் கலைத்துறையில் ஏற்பட்ட மாற்றத்தைக் குறிப்பிடுவது
(1) உலகியல் இரசனையை முதன்மையாகக் கொண்ட கலைப்படைப்புக்கள் தோன்றியமை
(2) கலைஞர்களின் வகுப்பு ரீதியான பெயரினைக் கலைப்படைப்புகள் கொண்டிருந்தமை.
(3) கலைப்படைப்புக்கு அனுசரணை வழங்கும் பலம் தேவாலயங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தமை
(4) கலைப்படைப்புக்கள் சமயத்துடன் மட்டுமே சார்ந்திருந்தமை

31. கைத்தொழிற் புரட்சிக் காலத்தில் பிரித்தானியாவில் நில அடைப்பு இயக்கம் மூலமாக இடம்பெற்றது
(1) பெரிய நிலங்கள் சிறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு வேறாக்கப்பட்டமை
(2) ஏழைகளுக்குச் சொந்தமான நிலங்கள் பிரபுக்களால் கைப்பற்றப்பட்டமை
(3) கைத்தொழில் நடவடிக்கைகளுக்காக கிராமிய நிலங்கள் பயன்படுத்தப்பட்டமை
(4) சிறு விவசாயிகளுக்கு உரித்தான சிறிய நிலங்கள் ஒன்று சேர்க்கப்பட்டு பெரிய விவசாயப் பண்ணைகள் உருவாக்கப்பட்டமை

32. கீழே தரப்பட்டுள்ள கருத்துகள் உள்ளடங்கிய அரசியல் தத்துவம் உலகம் முழுவதும் எந்தப் புரட்சியின் பின்னர் பரவியது?
- சமுதாயத்துக்கு உரித்தான செல்வம் தொடர்பான பொது உரிமையை ஏற்றுக்கொள்ளுதல்
- அனைத்துக் குடிமக்களுக்கும் தமது திறன்களை மேம்படுத்திக்கொள்ள சமமான சந்தர்ப்பம் வழங்குதல்
- உற்பத்தியின் பயனை அனைவருக்கும் பகிர்ந்தளித்தல்

(1) அமெரிக்க சுதந்திரப் போர் (2) பிரான்சியப் புரட்சி
(3) ரஷ்யப் புரட்சி (4) ஆங்கிலப் புரட்சி

33. இரண்டாம் உலக மகா யுத்த காலத்தில் ஏனைய ஆசிய நாடுகளை ஆக்கிரமித்த ஆசிய நாடு
(1) ஜப்பான் (2) சீனா
(3) மொங்கோலியா (4) கொரியா

[பக். 5 ஐப் பார்க்க

31799

OL/2021(2022)/33-T-II

33 T II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2021(2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2021(2022)
General Certificate of Education (Ord. Level) Examination, 2021(2022)

ඉතිහාසය II
வரலாறு II
History II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

அறிவுறுத்தல்கள் :

- பகுதி I இல் வினா இலக்கம் 1 கட்டாயமானது.
- பகுதி II இலிருந்து நான்கு வினாக்களுக்கும் பகுதி III இலிருந்து ஒரு வினாவுக்கும் விடை எழுதுக.
- எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக.

பகுதி I

1. (அ) (i) கீழே தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் எல்லாவற்றையும் வழங்கப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப் படத்தில் குறித்துப் பெயரிடுக.

காலதித்த, நாச்சத்துவ வாவி, மாணிக்க கங்கை, பொலன்னறுவை, கன்னொறுவ, தேவேந்தர, கந்தரோடை (கந்துருகொட), சொரபொர வாவி, கோகண்ண, கலா ஓயா, சிலாபம், கோட்டை (12 புள்ளிகள்)

(ii) கீழே தரப்பட்டுள்ள வரலாற்று இடங்கள் அனைத்தையும் வழங்கப்பட்டுள்ள பகுதி உலகப் புறவுருவப் படத்தில் குறித்துப் பெயரிடுக.

வங்காள விரிகுடா, தாய்வான், உரோமாபுரி, போர்த்துக்கல், இலண்டன், செங்கடல் (06 புள்ளிகள்)

(ஆ) (i) கீழே *A, B, C, D* எனத் தரப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை ஒழுங்குமுறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.

A - கலிகால சாஹித்திய சர்வக்ஜ பண்டிதர் என்ற பட்டப் பெயரைப் பெற்ற மன்னரைக் குறிப்பிடுக.

B - இலங்கையில் பௌத்த பாடசாலைகளை அமைப்பதில் முன்னோடிப் பணியை மேற்கொண்ட வெளிநாட்டு இனத்தவர் யார்?

C - முதலாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் தோல்வியடைந்த ஜெர்மனியுடன் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம் எது?

D - அணிசேரா நாடுகள் அமைப்பினைத் தாபிப்பதற்கு முன்னின்ற இந்தியப் பிரதம மந்திரியின் பெயரைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

- *A, B* என்பவற்றில் காட்டப்பட்டுள்ள படங்களை அவதானித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை வினா இலக்க ஒழுங்குமுறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.

(ii) 1. உரு *A* இல் காட்டப்பட்டுள்ள மன்னனின் பெயரைக் குறிப்பிடுக

2. மன்னராகுவதற்கு முன்னர் இவருக்கு வழங்கப்பட்ட பெயர் யாது?

3. இந்த மன்னனுக்குரிய அரச வம்சம் எது?

4. இவரினால் தலதா மாளிகைத் தொகுதியுடன் இணைக்கப்பட்ட கலையம்சம் கொண்ட ஆக்கத்தைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)



A

[பக். 2 ஐப் பார்க்க

(iii) 1. உரு *B* இல் காட்டப்பட்டுள்ள சித்திரத்தினால் குறிப்பிடப்படுபவர்கள் யாவர்?

2. இந்த சித்திரம் வரையப்பட்டுள்ள தேவாலயத்தின் பெயரைக் குறிப்பிடுக.

3. இந்த சித்திரத்தை வரைந்த சித்திரக் கலைஞரைக் குறிப்பிடுக.

4. இந்தச் சித்திரம் எந்தக் காலத்துக்கு உரியதாகும்?

(04 புள்ளிகள்)



B

பகுதி II

2. (i) இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட மனிதன் வசித்த சுற்றாடல் வலயங்கள் **மூன்றின்** பெயர்களைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) வரலாற்றுக்கு முற்பட்ட மனிதனின் வாழ்க்கை முறையில் காணக்கூடிய பண்புகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) இலங்கையில் முன் வரலாற்றுக் காலத்தை வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து வேறுபடுத்தி இனங்காணக்கூடிய விடயங்கள் **இரண்டினை** விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) ஆரம்ப வரலாற்றுக் காலத்துக்குரிய குடியிருப்புக்களின் கட்டமைப்பையும் தன்மையையும் **மூன்று** விடயங்களைக் கொண்டு விவரிக்குக. (06 புள்ளிகள்)

3. (i) புராதன இலங்கையில் பின்வரும் நபர்களைக் குறிப்பிடும் பதவிப் பெயர்களை **ஒழுங்குமுறைப்படி** எழுதுக.

A - குடும்பத்தின் தலைவன்

B - கிராமத் தலைவன்

C - சிறு நில அலகு ஒன்றைப் பரிபாலனம் செய்த பெண்மணி (03 புள்ளிகள்)

(ii) கீழே குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று நிகழ்ச்சிகளுடன் தொடர்புடைய மன்னர்களை **ஒழுங்குமுறைப்படி** குறிப்பிடுக.

A - அனுராதபுரத்தை திட்டமிடப்பட்ட நகரமாக்குதல்

B - ஸ்ரீ மகாபோதி (வெள்ளரசு) மரக்கிளையை நடுதல்

C - மின்னேரியா வாவியைக் கட்டுதல்

D - பொலன்னறுவையை சோழர் ஆட்சியிலிருந்து விடுவித்தல் (04 புள்ளிகள்)

(iii) வசப மன்னனின் ஆட்சிக் காலத்தின் முக்கியத்துவத்தை **இரண்டு** விடயங்கள் கொண்டு விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) அனுராதபுரம், பொலன்னறுவை ஆகிய இராசதானிகளின் அரசர்கள் வெளிநாடுகளுடன் தொடர்புகள் கொண்டிருந்த விதத்தினை **மூன்று** உதாரணங்கள் கொண்டு விவரிக்குக. (06 புள்ளிகள்)

4. (i) இரண்டாவது நகரமயமாக்கல் காலத்தில் நிலவிய இராசதானிகள் **மூன்றின்** பெயர்களைக் குறிப்பிடுக. யாப்பாகு, கோட்டை, தெதுநாகல் (03 புள்ளிகள்)

(ii) முதலாவது நகரமயமாக்கல் காலத்துக்குரிய புராதன நகரங்கள் வீழ்ச்சியடைவதில் செல்வாக்குச் செலுத்திய **இரண்டு** காரணிகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) இரண்டாவது நகரமயமாக்கல் காலத்தில் இலங்கையின் பொருளாதாரக் கோலத்தில் காணக்கூடியதாக இருந்த **இரண்டு** அம்சங்களை விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) சிறந்த ஆட்சியாளன் என்ற வகையில் ஆறாம் பராக்கிரமபாகு மன்னன் ஆற்றிய சேவைகள் **மூன்றினை** விவரிக்குக. (06 புள்ளிகள்)

குளங்கள் அமைத்தமை

பௌத்த சமயத்துக்காக உழைத்தமை

விகாரைகளை புனர்நிர்மாணம் செய்தமை

[பக். 3 ஐப் பார்க்க

5. (i) கண்டி இராச்சியத்தைக் குறிப்பதற்குப் பயன்படுத்திய **மூன்று** பெயர்களைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) கீழே *A* - *D* வரை உள்ள கூற்றுக்களுக்குப் பொருத்தமான விடையை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவுசெய்து **ஒழுங்குமுறைப்படி** எழுதுக.

A - கண்டி இராச்சியத்தின் முதலாவது ஆட்சியாளன்

B - கண்டி இராச்சியத்தை ஆக்கிரமிப்பதற்கு சீதாவாக்கை இராஜசிங்க மன்னனுக்கு உதவி வழங்கிய பிரதானி

C - தோனா கதரினா என்ற பெயரில் ஞானஸ்நானம் பெற்ற இளவரசி

D - கி. பி. 1766 இல் ஒல்லாந்தருடன் உடன்படிக்கை செய்து கொண்ட மன்னன்

(கரலியத்த பண்டார, கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன், குசுமாசன தேவி, வீரசுந்தர பண்டார சேனா சம்மத விக்கிரமபாகு, சமுத்திராதேவி, ஸ்ரீ விஜய இராஜசிங்கன், ஜயவீர பண்டார) (04 புள்ளிகள்)

(iii) இரண்டாம் இராஜசிங்கன் தனது ஆட்சிக் காலத்தில் எதிர்நோக்கிய சவால்கள் **இரண்டினைக்** குறிப்பிட்டு அவற்றுள் **ஒன்றில்** வெற்றி பெறுவதற்காக மேற்கொண்ட நடவடிக்கையைச் சுருக்கமாக விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) கண்டி இராச்சியத்தின் நிர்வாக நடவடிக்கைகள் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த விதத்தினை **மூன்று** விடயங்களைக் கொண்டு விளக்குக. (06 புள்ளிகள்)

6. (i) இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை பிரித்தானியர்கள் கைப்பற்றுவதற்கு முன்னர் இந்நாட்டுக்கு வருகை தந்த பிரித்தானிய தூதுவர்கள் **மூவரின்** பெயரினைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) கி. பி. 1797 இல் கரையோரப் பிரதேசங்களில் ஏற்பட்ட கலகங்கள் பற்றி ஆராய்ந்து பார்த்த மியூரன் ஆணைக்குழுவின் **இரண்டு** பரிந்துரைகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) பிரித்தானியர்கள் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றுவதற்கு ஏதுவாக அமைந்த **இரண்டு** விடயங்களை விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) கி. பி. 1848 இல் பிரித்தானியருக்கு எதிரான சுதந்திரப் போராட்டம் ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்திய **மூன்று** காரணிகளை விவரிக்குக. (06 புள்ளிகள்)

7. (i) சுதந்திரத்துக்கு முன்னர் இலங்கையில் தோன்றிய அரசியல் கட்சிகள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) கி. பி. 1956 இல் இலங்கையின் அதிகாரத்துக்கு வந்த அரசாங்கம் அறிமுகப்படுத்திய **இரண்டு** சீர்திருத்தங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) 1978 அரசியல் யாப்பிற்கு அமைய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பெற்றிருந்த **இரண்டு** அதிகாரங்களைச் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) சுதந்திரத்தின் பின்னர் முதல் மூன்று தசாப்தங்களில் இலங்கையில் சமூக நலன்புரி நடவடிக்கைகளை முன்னேற்றுவதற்கு எடுக்கப்பட்ட **மூன்று** நடவடிக்கைகளை விளக்குக. (06 புள்ளிகள்)

[பக். 4 ஐப் பார்க்க

பகுதி III

8. (i) பிரித்தானியாவில் ஆரம்பமான கைத்தொழில் புரட்சி பரவிய ஐரோப்பிய நாடுகள் **மூன்றின்** பெயர்களைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) கைத்தொழில் புரட்சி முதலில் பிரித்தானியாவில் ஆரம்பமாவதற்கு செல்வாக்குச் செலுத்திய **இரண்டு** காரணிகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) கைத்தொழில் புரட்சிக் காலத்தில் பிரித்தானியாவில் நிலக்கரிக் கைத்தொழிலில் ஏற்பட்ட முன்னேற்றத்தை **இரண்டு** உதாரணங்களை குறிப்பிட்டு விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) கைத்தொழில் புரட்சியின் விளைவாக உலக பொருளாதாரத் துறையில் ஏற்பட்ட **மூன்று** மாற்றங்களை விவரிக்குக. (06 புள்ளிகள்)

9. (i) முதலாவது உலக மகா யுத்தம் தொடர்பாக நேச அணிக்குரிய நாடுகள் **மூன்றின்** பெயர்களைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) முதலாம் உலக மகா யுத்தம் ஏற்படுவதில் தாக்கம் செலுத்திய **இரண்டு** காரணங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) இரண்டாம் உலக மகா யுத்தத்தின் விளைவாக உலக அரசியலில் ஏற்பட்ட மாற்றங்கள் **இரண்டினை** விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) உலக சமாதானத்தைப் பாதுகாப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபை பின்பற்றக்கூடிய செயற்பாடுகள் **மூன்றினை** விளக்குக. (06 புள்ளிகள்)

❊ ❊ ❊